# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **231/மா/2017**

நாள் : **22/06/2018**

**திரு C. வேல்கண்ணன்,**
**சென்னை – 600 014.**

– **முறையீட்டு மனுதாரர்**

உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் – 9,
சென்னை மாநகராட்சி,
சென்னை.

– **எதிர் மனுதாரர்**

சென்னை, இராயப்பேட்டை, எண்.4/3–B, பெசன்ட் சாலை, தாரகேஸ்வரர் அடுக்கக முகவரியில் வசிக்கும் திரு C. வேல்கண்ணன் அவர்களின் 29.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 231/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தற்பொழுது ஹாங்காங் நகரில் வசிப்பதால், தனது முறையீட்டு மனு மீதான விசாரணைக்கு தனது தந்தையார் திரு S.M. செல்லசாமி அவர்கள் கலந்து கொள்வதற்கு அதிகாரம் வழங்கி அறிக்கை அளித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள், அவர் சார்பாக அவரது தந்தையார் அளித்த வாக்குமூலம் மற்றும் அவரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், 9–வது மண்டல உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, இராயப்பேட்டை, எண்.4/3–B, பெசன்ட் சாலை, தாரகேஸ்வரர் அடுக்கக முகவரியில் வசிக்கும் திரு C. வேல்கண்ணன் என்பவர், சென்னை, இராயப்பேட்டை, எண்–160, லாயிட்ஸ் சாலை, பிளாக்–D, 14– எண்ணிட்ட அடுக்கக மனைக்கான பிரிக்கப்பட முடியாத (UDS Land) 6.874 சதவிகித நிலப்பரப்பினை 26.03.1997 நாளிட்ட ஆவண எண். 643/1997 மூலம் தனக்கு விற்பனைக் கிரையம் செய்து தரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அம்மனைக்கு தனது சகோதரி திருமதி R.மகேஸ்வரி மற்றும் அவரது கணவர் திரு C. விஜயகுமார் ஆகியோர் பெயரில் தாக்கலாகி உள்ள சொத்து வரி விவரங்களைக் குறிப்பிட்டு அவ்வரிவிதிப்பினை தன் பெயரில்

மாற்றக்கோரி தனது தந்தையார் மூலமாக 9–வது மண்டல உதவி வருவாய் அலுவலரிடம் மனு செய்தும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். சென்னை, எண்–160–லாயிட்ஸ் சாலை, பிளாக்–D, 14 எண்ணிட்ட அடுக்கக மனையினை தனக்காக தனது சார்பில் பதிவு (Book) செய்த தனது சகோதரி மற்றும் மைத்துனர் பெயரில் தவறாக சொத்துவரி தாக்கலாகி உள்ளதெனக் குறிப்பிட்டு கிரயம் பெற்ற அச்சொத்துவரி பெயரினை தன் பெயரில் மாற்றம் செய்ய கோரியதற்கு ஐந்து வகையான ஆவணங்களைக் குறிப்பிட்டு, அவ்வாவணங்களைத் தாக்கல் செய்ய 08.05.2017 நாளிட்ட கடிதத்தில் உதவி வருவாய் அலுவலர் கோரியதாகவும் தெரிவித்துள்ளார். சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய மேற்குறிப்பிட்ட கடிதத்தில் கோரப்பட்ட ஆவணங்கள் தேவையில்லை என்றும், தனக்கு விற்பனை செய்து தரப்பட்ட நிலக் கிரய ஆவணம் போதுமானது எனக் குறிப்பிட்டு (Primary evidentiary proof), திருமதி R. மகேஷ்வரி மற்றும் திரு C. விஜயகுமார் ஆகியோர் பெயரில் உள்ள மேற்குறிப்பிட்ட அடுக்கக மனைக்கான சொத்துவரிப் பெயரினை தன் பெயரில் மாற்றம் செய்ய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட முறையீடு சம்பந்தமாக சென்னை மாநகராட்சி 9–வது மண்டல உதவி வருவாய் அலுவலர் 07.02.2018 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். இந்நேர்வு சம்பந்தப்பட்ட அடுக்கக மனை எண்.14 சென்னை இராயப்பேட்டை, 160–லாயிட்ஸ் சாலை, பிளாக் D–இல் அமைந்துள்ளதென்றும், மாநகராட்சி கோரிய மூன்று வகையான ஆவணங்களை இணைத்து சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என உதவி வருவாய் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு, அடுக்கக மனை மற்றும் அம்மனை குடியிருப்புதாரர்களின் விவரங்களை நில மேம்பாட்டாளரிடம் (Promoter) பெற்று வரி விதிப்பு செய்ததாகவும் அவ்வாறு விதிக்கப்பட்ட வரி விதிப்பிற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில் அது உறுதி செய்யப்பட்டதென்றும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திரு C. வேல்கண்ணன் அவர்கள் பிரிக்க முடியாத பாகத்திற்கான விற்பனைப் பத்திரத்தினை மட்டுமே தாக்கல் செய்துள்ளார். எனினும் கட்டட ஒப்பந்த ஆவணம் மற்றும் 15 ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிதழ்களும் கோரப்பட்டதாக தெரிவித்துள்ளார். அடுக்கக மனைக்கு சொந்தக்காரர் என்பதற்கு கிரையப் பத்திரம் மட்டும் ஒரு முதன்மையான ஆவணம் அல்ல என்றும் கட்டிடதாரருடன் செய்து கொண்ட கட்டட ஒப்பந்த ஆவணம் மூலமே அம்மனையின் உரிமையாளர், அமைவிடம் போன்ற விவரங்களை தெரிந்து கொள்ள இயலும் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய தேவையான ஆவணங்களை தாக்கல் செய்யக்கோரி முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்துமாறும் தனது அறிக்கையில் கோரியுள்ளார்.

3. எதிர்மனுதாரரான மண்டல உதவி வருவாய் அலுவலரிடம் 09.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. சொத்து வரி பெயர் மாற்றம் செய்வதற்கு மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் படிவம்–9 பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்றும், 08.05.2017 நாளிட்ட கடிதத்தில் ஐந்து இனங்கள் குறித்த ஆவணங்களைக் குறிப்பிட்டதாகவும் ஆனால் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்த 07.02.2018 நாளிட்ட அறிக்கையில் மூன்று இனங்கள் குறித்த ஆவணங்கள் மட்டும் தேவையெனக் குறிப்பிட்டு உள்ளதாகவும் உதவி வருவாய் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், கிரயம் பெற்ற ஆவணத்தில் மனுதாரரின் பெயர் உள்ளதென்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு, தனது 08.05.2017 கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வகையான ஆவணங்கள் வழங்கப்படவேண்டுமென்பதற்கு நிலையான ஆணைகளோ, அரசாணைகளோ, சுற்றறிக்கையோ, மாவட்ட நகராட்சிகள் சட்டமோ அல்லது மாவட்ட மாநகராட்சி சட்ட விதிகளோ இருப்பதாக கருதுவதாகவும், இது சம்பந்தமாக ஒரு வாரத்தில் தன்னுடைய பதிலினை சமர்ப்பிப்பதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். கிரயம் பெற்ற ஆவணத்தில் மனுதாரருடைய பெயர் உள்ளதென்றும் புதிய வரி விதிப்பிற்கு 15 ஆண்டுகளுக்கான வில்லங்கச் சான்றிதழ் தேவையில்லை எனவும் குறிப்பிட்டார். மேலும், இக்கட்டிடம் பொறுத்தவரை வேறு நபர்கள் பெயரில் 1997–ஆம் ஆண்டு முதல் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதென்றும், அது சம்பந்தப்பட்ட மூலக் கோப்புகள் இல்லையென்றும், முந்தைய கோப்புகள் இருந்தால் அனுப்பிவைக்கிறேன். இல்லையெனில் தகவல் தெரிவிக்கிறேன் என்றும் விசாரணையின்போது உறுதி அளித்தார். ஆனால், விசாரணையின்போது உறுதி அளித்தபடி, உதவி வருவாய் அலுவலர் இதுநாள் வரையிலும் எந்தவித விவரங்களையும் அளிக்கவில்லை. மேலும், அவகாசமும் கோரவில்லை.

4. முறையீட்டு மனுதாரரின் தந்தை திரு S.M. செல்லசாமி அவர்கள் 09.03.2018 அன்று தனது வாக்குமூலமாக ஒரு அறிக்கையினை நேரில் ஆஜராகி சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில் தனது குமாரர் திரு C. வேல்கண்ணன் என்பவர், 1997–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் திருவாளர் வசந்த் பில்டர்ஸ் என்ற நிறுவனத்தினரிடமிருந்து இராயப்பேட்டை வாயிட்ஸ் சாலையில் கட்டப்பட்ட அடுக்ககத்தில், D- பிளாக், இரண்டாவது தளத்தில், 1050 சதுர அடி பரப்பிலான 14 –எண்ணிட்ட அடுக்கக மனையினை வாங்க அந்நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதென்றும், அதனைத் தொடர்ந்து அம்மனை திட்டத்தில் 26.03.1997 நாளிட்ட ஆவண எண். 643/97–இல் புல எண்.112/30 (பகுதி) மற்றும் 112/ 37 (பகுதி) நிலத்தில் 3 கிரவுண்ட் (ம) 2145 சதுர அடி பரப்பிலான இடத்தில் 6.874 சதவிகித பிரிக்கப்படாத நிலம் திரு வேல்கண்ணன் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதென்று தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட அடுக்ககக் குடியிருப்புக்கான சொத்துவரி விதிப்பு எண்.09–119–02774–000, தனது மகள் திருமதி R. மகேஷ்வரி மற்றும் மருமகன் ஆகியோர் பெயரில் தவறுதலாகத் தாக்கலாகி உள்ளதெனக் குறிப்பிட்டு அச்சொத்துவரிக்கான பெயரினை சட்டபூர்வ உரிமையாளரான தனது மகன் திரு C. வேல்கண்ணன் பெயரில் மாறுதல் செய்து தருமாறு தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள அவ்வடுக்கக மனைக் குடியிருப்பினை இராயப்பேட்டை இந்தியன் வங்கிக் கிளையில் அடமானம் வைத்து ரூ.25 லட்சம் கடன் பெற்றமைக்கு, இந்தியன் வங்கியில் அடமான ஒப்பளிப்புச் செய்து 31.03.2017 அன்று பதிவு செய்யப்பட்ட 352 /17 எண்ணிட்ட ஆவணத்தையும் (Deposit of Title Deed) தனது அறிக்கையுடன் சமர்பித்துள்ளார். மேலும், கீழ்க்காணும் ஆவணங்களின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார் :-

(i) 25.02.1997 நாளிட்ட விற்பனை ஒப்பந்த ஆவணம்.

(ii) 27.02.1997 நாளிட்ட கட்டட கண்காணிப்பு பணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்த ஆவணம்.

(iii) பிரிவுபடாத நில விற்பனைக்கான 26.03.1997 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.643/1997.

(iii) வசந்த் அடுக்கக மனை உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கான விதிகள் மற்றும் நெறிமுறை ஆவணம்.

(v) 01.09.2015 நாளிட்ட வாடகை குத்தகை ஒப்பந்த ஆவணம்.

5. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள், மனுதாரர் சார்பாக அவரது தந்தையார் அளித்த அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் சென்னை, 260–வாயிட்ஸ் சாலை, வசந்த் அடுக்ககம் D- பிளாக், 14 எண்ணிட்ட அடுக்கக மனைக்கான 6.874 சதவிகித பிரிபடாத பாக நிலப் பரப்பினை 26.03.1997 நாளிட்ட ஆவண எண்.643/1997 மூலம் கிரயம் பெற்றுள்ளார். மேலும், பிரிபடாத அந்நிலத்தில் கட்டிடம் கட்ட நில மேம்பாட்டாளருடன் (ஒசடி அடிவநச) 27.02.1997 அன்று ஒப்பந்தம் ஒன்றினையும் மேற்கொண்டுள்ளார். மேற்குறிப்பிட்ட ஆவணத்தின் அடிப்படையில் அடுக்கக மனை உரிமையாளர் பெயரில் சொத்து வரி விதிப்பு செய்யப்படாமல், எவ்வித ஆவணமும், அத்தாட்சியும் இல்லாத வேறொரு நபர் பெயரில் சொத்துவரி தாக்கலாகி உள்ளது. உதவி வருவாய் அலுவலரின் 07.02.2018 நாளிட்ட அறிக்கையின் கீழ்க்காணும் குறிப்பு இதனை உறுதி செய்கிறது.

> "The Respondent submits that to avoid loss of Revenue, the details of flats and occupier details might have obtained from the promoter of the flat building.

சென்னை மாநகராட்சி சட்டவிதிகளின்படி அடுக்கக மனை உரிமையாளரிடமிருந்து சொத்து விவர அறிக்கையினை உரிய படிவத்தில் பெற்று, அக்கட்டடத்தின் உபயோகத் தன்மை, கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நாள் மற்றும் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட நாள் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்தில் கொண்டு, அவ்வடுக்கக மனையின் பரப்பளவு, மொத்த நிலத்தின் பரப்பளவு மற்றும் பிரிபடாத நிலத்தின் பங்கு ஆகியவற்றையும் கணக்கிட்டு சொத்துவரி விதிப்பு செய்யப் படவேண்டும். எந்தவித ஆவணமும் இல்லாத மூன்றாம் நபர்கள் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில் சொத்துவரி விதிப்பது முறையல்ல. சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலரின் இத்தகைய நடவடிக்கை அவரது பணியின் மீது அவர் காட்டும் அலட்சியத் தன்மையினை உறுதிபடுத்துகிறது. இத்தகைய நடவடிக்கையினால் உண்மையான கட்டட உரிமையாளர்கள் அலைக்கழிக்கப் படுவதுடன் தாமதம் ஏற்படுத்துவதால் ஊழலுக்கும் வழி வகுக்கிறது என்பதை இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் வங்கி காசோலை மூலம் சொத்துவரி நிலுவைத் தொகையினையும் செலுத்தியுள்ளார். இந்நிலையிலும் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலித்து சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய உதவி வருவாய் அலுவலர் தவறியுள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவரது தந்தையாரிடம் உரிய ஆவணங்களைப் பெற்று, சென்னை, இராயப்பேட்டை, 260–வாயிட்ஸ் சாலை, வசந்த் அடுக்ககம், பிளாக் D, 14 எண்ணிட்ட அடுக்கக மனைக்கான சொத்துவரி விதிப்புப் பெயரினை சட்டபூர்வமான ஆவணங்களை வைத்துள்ள முறையீட்டு மனுதாரர் திரு C. வேல்கண்ணன் பெயரில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளும்படி 9–வது மண்டல உதவி ஆணையர் / உதவி வருவாய் அலுவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுவதுடன் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு உடன் தெரிவிக்கும் படியும் ஆணையிடப்படுகிறது.

6. மேலும், உதவி வருவாய் அலுவலர் 09.03.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது சொத்து வரி விதித்தற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதாக இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்தார். சுமார் நூறு நாட்கள் கடந்த நிலையிலும் உதவி வருவாய் அலுவலரிடமிருந்து எந்தவித அறிக்கையும் வரப்பெறவில்லை. அவகாசமும் கோரவில்லை. இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணையின்போது வழங்குவதாகத் தெரிவித்த ஆவணங்களையே வழங்கத் தவறிய உதவி வருவாய் அலுவலரின் செயல்பாடு, பொதுமக்களின் கோரிக்கைக் குறித்த நேர்வுகளில், அவரது செயல்பாடு எவ்வாறு இருக்கும் என்பதையும் உறுதி செய்கின்றது. எனவே, சொத்துவரி

பெயர்மாற்றம் கோரிய இந்நேர்வில், சட்டபூர்வ ஆவணங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தவறியதுடன், இம்முறைமன்ற நடுவத்தில் உறுதியளித்தவாறு அறிக்கை தாக்கல் செய்யவோ அல்லது அவகாசம் கோரவோ முற்படாமல் விதிகளின்படியும் நடைமுறைகளின்படியும் செயல்படாமல் பொது மக்களுக்கான பணியாளர் என்ற நிலை தவறி அவரது அலுவலகத்தின் பொதுப்பணியை தனது இஷ்டத்திற்கு செயல்படுத்தியுள்ளார். எனவே, சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி ஆணையர் / 9–வது மண்டல அலுவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினையும் இவ்வாணை பெறப்பட்ட 30 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கும்படியும் சென்னை மாநகராட்சி 9–வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு C. வேல்கண்ணன்,
த/பெ. S.M. செல்லசாமி,எண்.4/3பி, பெசன்ட் சாலை,
தாரகேஸ்வரர் அபார்ட்மெண்ட்,
சென்னை – 600 014.

2. உதவி ஆணையாளர் / உதவி வருவாய் அலுவலர்,
மண்டலம் – 9, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.1, லேக் ஏரியா, 4–வது குறுக்குத் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

நகல் : மாநகராட்சி ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,சென்னை – 600 003.

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி

# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி எண். 044-22201337 / நிகிரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**கடித எண். 891/மாகராட்சி/2018 நாள் : 10.07.2018**

பெறுநர்

1) **திரு C. வேல்கண்ணன்,**
**த/பெ. S.M. செல்லசாமி,எண்.4/3பி, பெசன்ட் சாலை,**
**தாரகேஸ்வரர் அபார்ட்மெண்ட்,**
**சென்னை – 600 014.**

2) **உதவி ஆணையாளர் / உதவி வருவாய் அலுவலர்,**
**மண்டலம் – 9, பெருநகர சென்னை மாநகராட்சி,**
**எண்.1, லேக் ஏரியா, 4–வது குறுக்குத் தெரு,**
**நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.**

அய்யா,

பொருள் : மாநகராட்சி – சென்னை மாநகராட்சி – இராயப்பேட்டை 260, லாயிட்ஸ் சாலை – D - 14, வசந்த் அடுக்ககம், சொத்துவரி பெயர் மாற்றம் செய்தல் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடுதல்.

பார்வை : 20.06.2018 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.231/2018.

*****

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில் கீழ்க்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன :-

(i) பக்கம் –1, பத்தி –1 இல் திருமதி R. மகேஸ்வரி மற்றும் அவரது கணவர் திரு C. விஜயகுமார் என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக **திருமதி** R. **மகேஸ்வரி மற்றும் திரு C. விஜயகுமார் என்றும்** ;

(ii) பக்கம் –2, பத்தி –1 இல் தனது சகோதரி மற்றும் மைத்துனர் என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக **தனது சகோரி மற்றும் திரு C. விஜயகுமார் என்றும்** ;

(iii) பக்கம் –3, பத்தி – 4 இல் தனது மகள் R. மகேஸ்வரி மற்றும் மருமகன் என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக **தனது மகள் R. மகேஸ்வரி மற்றும் திரு C. விஜயகுமார் என்றும் திருத்திப் படித்து கொள்ளவும்.**

**2018** ஆம் ஆண்டு ஜூலை , திங்கள் **10–**ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி பதிவாளர்

நகல் : **மாநகராட்சி ஆணையர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் மாளிகை,சென்னை – 600 003.**

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**